# எதிர்கால இந்தியா

*குறிப்புச்சட்டம்*

- முன்னுரை
- நமது நாகரீகம்
- நமது சமுதாயம்
- கல்வித்திட்டம்
- மாணாக்கர்கள்
- பொருளாதாரம்
- முடிவுரை

குருதி சிந்தியும்

அகிம்சை வழியிலும்

அடைந்தோமா சுதந்திரம் ….?

அடிமையின் ஆதிக்கம் அடியோடு அழிந்ததோ…?

அதிகார வர்க்கம் ஆட்சி அமைத்ததோ…?

போராடி பெற்றதால் என்னவோ

போராட்டம் ஒன்றே தீர்வாகிப்போனதே ….!!!

சுதந்திரம் அடைந்த சுதந்திர நாட்டில்

ஆண்டுகள் எழுபதை தாண்டியும்

கொடியின் மீது கொண்ட மதிப்பு

கொஞ்சமும் குறையவில்ரைல….1

என் தாய் திரு நாட்டின் மதிப்பினை

நெஞ்சில் சுமக்கம் நாட்டினருக்கு

நாள்தோறும் சுதந்திர தினமே….! – எதிர்க்கால இந்தியர்கள்

## முன்னுரை

பல்லாண்டு பல்லாண்டாக வளர்ந்து வந்துள்ளது ஆலமரம் ஒன்று. கிளைகள் விட்டு நாலாபுறமும் அது பரவிக் கொண்டே போகிறது. இடம் விட்டு அசையாது நெடிது நிஷ்டையிலிருக்கும் முனிவர் ஒருவரது ஜடையும் தாடியும் தொங்கிக் கொண்டிருபக்பதைப் போல விழுதுகள் அம் மரத்தின்றும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதனடியில் எத்தனை பேர் வேண்டுமென்றாலும் தங்கி நிழலைப் பெறலாம். பருவங்களில் அவைகள் உண்ணக் கனிகளும் தரும். இத்தனை விதமான பெருமைகள் அவ்வலமரத்திற்கு உண்டு. அதன் அருகில் செவந்திச் செடி ஒன்று அது செழித்து வளர்ந்து இருக்கிறது. கபண்ணைக் கவரும் வண்ணமுடைய மலர்களை அது தேற்று விக்கிறது. அழகும் கவர்ச்சியும் அதனிடத்து மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. செவந்தி ஆலமரத்தினிடம் கூறுகிறது. “பூமியில் இடத்துக்கேடாக நீ ஏன் இவ்வளவு அகன்று உயர்ந்து விணாய் நின்று கொண்டிருக்கிறாய்” என்று ஆலமரத்தினப் பார்த்து கேலி செய்தது. அதுமட்டுமல்லாமல் அச்செடியின் சிறப்பினை அதுவே பெருமையாகக் கூறியது. ஆனால் ஆலமரம் ஒன்றும் கூறாமல் அமைதியாக நின்றது. இத்தகைய பொறுமையுடைய ஆலமரத்தினைப் போன்று தான் நம் இந்தியா சரித்திரம் உள்ளது. அந்த செவந்தி செடியினைப் போன்று பிற

நாடுகள் இத்தகைய சிறப்புமிக்க இந்தியாவின் எதிர்க்காலத்தைப்பற்றி எதிர்க்கால இந்தியா என்ற தலைப்பினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### *நமது நகரிகம்:*

இப்பரந்த உலகின் கண்ணுள்ள பாங்குகள் அனைத்தும் திரண்டு அமைந்தது. இது என்று நம் நாட்டைப் பற்றிப் பகர வேண்டும். உலகத்தில் எத்தனைவித மனித ஜாதிகள் உண்டோ அவை யாவையும் இந்நாட்டில் காணலாம். மொழிகள் எத்தனை உலகில் இருக்க முடியுமோ கிட்டத்தட்ட அத்தனையும் இங்கே காணலாம். விதவிமான பழக்க வழக்கங்களோ பகர்ந்து முடிவுறா. ஆலமரத்தை நாடி வரும் பறவைகளுக்கெல்லாம் அங்குத் தங்க இடமிருப்பது போன்று இந்நாட்டை நாடிவரும் மக்களுக்கெல்லாம் இங்கே இடமுண்டு இத்தனை வித தவேறுபாடுகளுக்கிடையில் தன் வியக்தியை இழந்துவிடாது இந்நாடு என்றென்றும் வாழ்ந்திருக்கிறது.

ஏந்த நாட்டின் மீதும் இந்தியாவானது படையெடுத்துப் போனது கிடையாது. பிறரை அடக்கியாள வேண்டும் என்ற சாம்ராஜ்யப்பித்து இந்நாட்டுக்குக் கிடையாது. அத்தகைய பேராசை எதிர்காலத்திலும் இதற்கு வந்து அமையாது. பிறரை அங்ஙனம் வாழ்ந்திருக்கத் தூண்டுவதுமே இந்நாட்டின் செயலாயிற்று இனியும் அச்செயலைத்தான் நம் நாடு செய்து முடிக்கும். பிறரை அழிக்க முயலுகின்றவன் தானே அழிந்துபட்டுப் போகிறான். ஊலகையெல்லாம் உய்விக்க முயலுகின்றவன் தானே உய்வு பெறுகிறான். அக்கோட்பாடுக்கு இந்தியா எடுத்துக்காட்டு ஆகிறது.

## நமது சமுதாயம்

செயற்கையாக மக்குளுக்கிடையில் கிளவை பண்யும் இயல்பு பல இடங்களில் இருந்துமு வருகிறது பிறப்பை முன்னிட்டு பிளவு, ஜாதியை முன்னிட்டு வேற்றுமை, மொழியை முன்னிட்டு முரண்பாடு, பழக்க வழக்கங்களைக் காரணமாக கொண்டு பிரிவினை இப்படியெல்லாம் வேற்றமையை வளர்க்கும் பாங்கை ஆங்காங்கு காணலாம். நும் நாட்டிலும் அத்தழைகய சிற்றியல்பு வடிவெடுத்து வந்திருக்கிறது. எதிர்கால இத்தகைய பிணக்களுக்கு இடம் இராது. ஊலகில் தோன்றிய மக்களுக்கு உலகில் வாழுவதற்கு உரிமையுண்டு. அதே விதத்தில் நம் நாட்டுக்குரிய மக்கள் எல்லோரும் இங்கு இனிது வாழ இடமுண்டு.

இந்நாட்டில் வசிப்பவர்கள் எல்லோரும் இந்நாட்டின் ஒற்றுமையை வளர்க்க கடமைப்பட்டிருக்கிறார்கள். ஜன சமுதாயத்தை ஒரே குடும்பமாகக் கருதுவது இதன் நாகரீகம் எல்லாம் இந்நாட்டு மக்கள் ஆவர். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேல் நாடுகளிலிருந்தும் நம் நாட்டுக்கு வர விரும்பும் பெருமக்கள் எதிர்க்காலத்தில் பலர் இருப்பார்கள் அவர்களை அன்புடன் ஆதரவு கொடுத்து நம் புண்ணிய ஸ்தலத்திற்கு அவர்களை வரவேற்பது நமது பரந்த நோக்கமாகும். மற்றும் நமது எதிர்க்கால சமுதாயம் எளிய வாழ்க்கையையும் உயர்ந்த எண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டாதாகும். அத்தகைய வாழ்க்கையை நாடுபவருக்கு இங்கு ஆதரவுடன் இடம் அளிக்கப்படும்.

*கல்வித்திட்டம்.*

ஒரு நாட்டின் பண்பை அறிதற்கு அந்நாடு முழுதையும் ஒருவர் சுற்றிப் பார்க்க வேண்டியது அவசியமில்லை. அந்நாட்டு மக்களை ஆயத்தப்படுத்தும் சில கல்விச்சாலைகளைச் சென்று பார்த்தல்

போதுமானது. பண்டொரு காலத்தில் நமது பண்பின் வளர்ப்பிடங்களாக ஆரண்யங்களிலிருந்து ரிஷிகளால் நிர்மாணிக்கப் பெற்ற சர்வகலாசாலைகள் திகழ்ந்து வந்தன. ஆதன் பறகு காசி, காஞ்சி, மதுரை போன்ற பட்டணங்களில் நமது உயர்ந்த கல்விச்சாலைகள் அமைந்திருந்தன. அங்குச் சென்று சிளல காலம் வசித்து வருவதே பலருக்கு உயர்ந்த பாடங்கள் பல கற்பதற்கு உற்ற உபயமாயிற்று. இன்றைக்கு நம்நாட்டில் தென்படும் புதிய சர்வகலாசாலைகள் நமது தேசியப்பண்பை வளர்ப்பகைவள் அல்ல. ஆங்கிலேயர்கள் தங்கள் காரியத்திற்காக அமைத்த சர்வகலாசலைகள் தான் ஏஞ்சியிருக்கின்றன. எழுதப்படிக்கத் தெரிந்தவர்களைப் பெருவாரியாக ஆய்த்தப்படுத்துவதே அவைகளின் நோக்கமாயிற்று. இனி அவைகளையெல்லாம் அடியோடு திருத்தியமைப்பதற்கு நம் நாட்டு பேரறிஞர்கள் பலர் முன் வருவார்கள். வெறும் பிரசங்கங்களாலும், கட்டுரைகளாலும், பரீசைகளாலும் மக்களைப் பெருமக்கள் ஆக்கிவிட முடியாது.

எதிர்காலக் கல்லூரி ஆசிரியர்கள் சீரிய வாழ்வு வாழும் பெருமக்களாக வந்து அமைவார்கள். இனி அமையப்போகும் கல்வி முறையில் முனிவர் போன்று மேன்மை அடையப் பெற்றவரே குலபதிகளாகக் கலாசாலைகளில் வந்து அமைவார்கள்.

*மாணாக்கர்கள்*

மக்கள் மனப்பான்மையில் கீழ்மையுறுமளவு நாடு கீழ்மையுறுகிறது. முக்கள் மனப்பான்மையில் மேலோங்குளவு நாடு மேலோங்குகிறது. நாடு என்னும் சொல் மக்களையே சிறப்பாகக் குறிக்கிறது. சென்ற சில நூற்றாண்டுகளில் நம் நாட்டு மக்கள் பெற்ற கல்வியும் வாழ்ந்த வாழ்வும் அவரவர் தனிநலத்தைக் குறித்தனவாகும். பின்பு தனக்கென வாழாது சமுதாத்துக்கென வாழ்கின்றவனே மேலோன் ஆகின்றான் நாடு ஒன்று தன்

நலத்தை மட்டும் நலத்தை கருத்தில் வைத்துக் கொள்ளாது உலக முழுதின் நன்மையைக் கருத்தில் வைக்குமளவு அது பாருக்கு நல்ல நாடு ஆகிறது. நும் மாணாக்குர்கள் இனிப்பெறும் பயிற்சியெல்லாம் தங்களுடைய சொந்த சுக ஜீவனத்துக்காகவல்ல: சுயநலத்துக்காவும் அல்ல: வருங்காலப் பிரஜைகள் நல்வாழ்வே வடிவெடுத்தவர்களாயிருந்து அத்தகைய வாழ்வைப் பொது நலத்துக்கு ஒப்படைப்பவர்களாகப் எதிர்க்கால மாணவர்களும், மாணவிகளும் பயிற்சி பெறுவார்கள்.

## *பொருளாதாரம்*

அருளைச் சிறப்பாக நாடுவது நமது தேசிய லட்சியம். ஆனால் பொருளைப் பற்றிய எண்ணத்தை விட்டு விடுவது என்பது அதன் கருத்து அல்ல. வாழ்க்கை முறையில் ஏழை என்றோ பணக்காரன் என்றோ வேற்றுமைக்கு இடம் கொடுக்கத எளிய வாழ்வே எல்லோருக்கும் பொதுவானதாகும்.

## முடிவுரை

இன்றைய நியைில் எந்த நாடும் தனித்திருக்கவும் மறைந்திருக்கவும் முயன்றாலும் முடியாது. எதேனும் ஒரு விதத்தில் மற்ற நாடுகளோடு தொடர்பு ழைவத்தே ஆக வேண்டும். சூழ்நிலை நம்மை அங்ஙனம் தூண்டுகிறது. பிற நாடுகளுக்கும் செல்லாது நம் நாட்டிலேயே இருக்க முன்பொரு காலத்தில் நம்வர் முயன்றது போன்று இனிசந் செய்யமாட்டோம். புறிரைத் தோற்கடித்து அவர்களுடைய பொருளைப் பறிப்பதற்கென்றே வெளிநாடுகளுக்குச் சென்ற வேறு பல சமுதாயங்கள் செய்த அடாத செயலையும் நம் செய்யத் துணியோம். ஊலக மக்கள் எல்லோரும் நலம் தரும் நல்லிணக்கத்தை உண்டு பண்ணுதற்னே எதிர்க்கால இந்தியா முழு மனதுடன் முயன்று வரும்.

இங்ஙனம் உல கநன்மைக்கே திலகமாகத் திகழும் எதிர்க்கால இந்தியா விரைந்து உருவெடுத்து வந்து கொண்டிருக்கிறது. நம் முன்னோர் இப் பொறுப்பை நிறைவேற்றும் நன்மக்கள் ஆவார்களாக.

அ. லீமாரஞ்சனி

பொருளறிவியல் துறைஇரண்டாம் ஆண்டு